P.L.RAJ IAS & IPS ACADEMY

Building Bureaucrats Since 2006

# July 11, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. **மெட்டாவின் ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடகங்களில் பயனர்களைத்தங்களுக்கு அடிமையாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள அம்சங்களை உடனடியாக முடக்க ஐரோப்பிய யூனியன் உத்தரவிட்டுள்ளது.**

   i. பயனர்களைத் தொடர் பயன்பாட்டுக்குத் தூண்டும் கட்டுப்பாடு இல்லாத பயன்பாடு (இன்ஃபினிட்டி ஸ்க்ரோலிங்) மற்றும் தானாக ஒளிபரப்பாகும் விடியோக்கள் (ஆட்டோ பிளே) போன்ற அம்சங்கள் ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராமில் இடம் பெற்றுள்ளதாக ஐரோப்பிய யூனியன் குற்றஞ்சாட்டியுள்ளது.

   ii. ஐரோப்பிய யூனியனின் கடுமையான எண்மச் சேவைகள் சட்டத்தின்கீழ் மெட்டா நிறுவனத்தின் மீது இப்புதிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. ஃபேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் பக்கங்களின் வடிவமைப்பு, குறிப்பாக சிறுவர்களின் உடல் மற்றும் மனநலத்துக்கு அச்சுறுத்தலாக விளங்குவதாக ஐரோப்பிய ஆணையம் தெரிவித்துள்ளது.

   iii. பயனர்களின் நேரத்தைக் கட்டுப்படுத்தும் கருவிகள் செயலிகளில் இருந்தாலும், அவை எளிகில் பறக்கணிக்கும் வகையிலேயே தொழில்நுட்ப ரீதியாக வடிவமைக்கப்பட்டுள்ளதாக ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

   iv. மெட்டா நிறுவனம் தனது வடிவமைப்புகளில் உடனடியாக மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என ஐரோப்பிய ஆணையம் வலியுறுத்தியுள்ளது. இதற்குக் காலக்கெடு விதிக்கப்பட்டுள்ள நிலையில், மெட்டா நிறுவனம் தனது தரப்பு விளக்கத்தை அளிக்கத் தவறினால் அல்லது குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அந்நிறுவனத்தின் உலகளாவிய ஆண்டு வருவாயில் 6 சதவீதம் வரை அபராதமாக விதிக்கப்படவாய்ப்புள்ளது.

   v. இந்நிலையில், குற்றச்சாட்டுகளுக்கு மறுப்புத் தெரிவித்து மெட்டா நிறுவனம் அளித்த விளக்கத்தில், 'பதின்ம வயதினரைப் பாதுகாப்பதற்காக எங்களின் செயலிகளில் ஏற்கெனவே பல கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்துள்ளோம். குறிப்பாக, இரவில் இன்ஸ்டாகிராம் பயன்படுத்துவதைத் தடுக்கும் மற்றும் தினசரி நேரத்தை 15 நிமிடங்களாகக் குறைக்கும் 'டீன் அக்கவுண்ட்ஸ்'

போன்ற அம்சங்களை அறிமுகப்படுத்தியுள்ளோம். ஐரோப்பிய ஆணையத்துடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றத் தயாராக இருக்கிறோம்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. **ஸ்பெயின் நாட்டின் தெற்கு மாகாணமான அல் மேரியாவில் ஏற்பட்டகாட்டுத்தீயில் சிக்கி 12 பேர் உயிரிழந்தனர். மேலும் 23 பேர் மாயமாகியிருப்பதாக அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.**

i. பிரபல சுற்றுலாத் தலமான சியரா டீ லாஸ் ஃபிலாப்ரெஸ் மலைத்தொடர் அருகே அமைந்துள்ள வறண்ட வனப்பகுதியில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அறுந்து விழுந்த மின்கம்பியில் இருந்து தீப்பொறி பரவியதே விபத்துக்குக் காரணமாகத் தெரிகிறது. இதுவரை 3,200 ஹெக்டேர் நிலம் எரிந்து நாசமாகியுள்ள நிலையில், 150 தீயணைப்பு வீரர்களும், 220 ராணுவ வீரர்களும் தீயை அணைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

ii. ஸ்பெயினில் அண்மைக்காலமாக தீவிர வெப்ப அலை வீசி வருகிறது. பெரும்பாலான பகுதிகளில் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸைத் தாண்டியுள்ளது.

iii. அதிக வெப்பம், பலத்த காற்று மற்றும் மழையின்மை ஆகியவையே இந்த காட்டுத் தீ வேகமாகப் பரவ முக்கியக் காரணமாகும்.

iv. கடந்த ஜூன் மாதம் நிலவிய கடும் வெப்பத்தின் காரணமாக ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

v. ஸ்பெயின் மட்டுமன்றி ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளும் வெப்ப அலையை எதிர்கொண்டு வருகின்றன. பிரான்ஸில் கோடையின் மூன்றாவது வெப்ப அலை வீசி வருகிறது. அங்குள்ள கிழக்கு பைரனீஸ் மலைப்பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயில் 5,000 ஹெக்டேர் நிலம் சாம்பலானதுடன், 10,000-க்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

3. **விண்வெளித் துறையில் அமெரிக்காவின் 'ஸ்பேஸ்எக்ஸ்' நிறுவனத்தைத் தொடர்ந்து, மீண்டும் பயன்படுத்தக்கூடிய 'ஆர்பிட்டல்' ரக ராக்கெட் பூஸ்டரை முதன்முறையாக வெற்றிகரமாக மீட்டெடுத்து சீனா புதிய வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது.**

i. விண்வெளிப் பயணங்களில் ராக்கெட்டுகளை மீண்டும் பயன்படுத்தும்

தொழில்நுட்பத்தில் அமெரிக்காவின் எலான் மஸ்குக்குச் சொந்தமான ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் கடந்த 2015 டிசம்பரில் முதல்முறையாக வெற்றிகண்டு, ஆதிக்கம் செலுத்தி வருகிறது. சுமார் 10 ஆண்டுகளுக்குப் பின் சீனாவும் தற்போது அந்த மைல்கல்லை எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ii. தென் சீனாவின் ஹைனான் மாகாணத்தில் உள்ள வணிகரீதியான விண்வெளி ஏவுதளத்தில் இருந்து இந்த ‘லாங் மார்ச்-10பி’ ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. திட்டமிட்டபடி தகுந்த சுற்றுப்பாதையில் ராக்கெட் தனது செயற்கைக்கோளை நிலைநிறுத்தியது.

iii. இதனிடையே, ராக்கெட் 2 அடுக்குகளாக பிரிந்தது. ராக்கெட்டின் முதல் அடுக்கு (பூஸ்டர்) கட்டுப்பாட்டுடன் மீண்டும் பூமியை நோக்கித் திரும்பியது. கடலில் அமைக்கப்பட்டிருந்த மிதவை மேடையில் பிரத்யேக வலை அமைப்பு மூலம் அந்தப் பூஸ்டர் பாதுகாப்பாக பிடிக்கப்பட்டு, மீட்டெடுக்கப்பட்டது.

iv. ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் ராக்கெட்டுகள் வழக்கமாகத் தரைப்பகுதியிலோ அல்லது ஆளில்லா கப்பல்களிலோ செங்குத்தாக இறங்குவதற்கு ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆனால், சீனாவின் இந்த லாங் மார்ச்-10பி ராக்கெட், வலை அமைப்பில் சிக்கிக்கொள்ளும் வகையில் முற்றிலும் மாறுபட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியுள்ளது.

v. சுமார் 63 மீட்டர் உயரமும், 5 மீட்டர் விட்டமும் கொண்ட இந்த லாங் மார்ச்-10பி ராக்கெட், திரவ எரிபொருளில் இயங்கும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய வணிகரீதியான ராக்கெட்டாகும். இது 890 டன் உந்துவிசையையும், 760 டன் எடையையும் கொண்டது. மீண்டும் பயன்படுத்தக்கூடிய கட்டமைப்பில், குறைந்த புவி சுற்று வட்டப்பாதைக்கு சுமார் 16 டன் எடையைச் சுமந்து செல்லும் திறன் இதற்கு உண்டு.

vi. கடந்த ஆண்டு சீனாவின் 2 நிறுவனங்கள் மேற்கொண்ட செங்குத்து தரையிறக்க சோதனைகள் தோல்வியில் முடிந்தன. இந்நிலையில், தற்போதைய இந்த வெற்றிகரமான சோதனை, சீனாவின் விண்வெளிப் பயணங்களுக்கான செலவைக் கணிசமாகக் குறைக்கும் என்றும், அந்நாட்டின் நிலவுப் பயணத்தை வேகப்படுத்தும் என்றும் விண்வெளித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

4. **அண்மையில் ஆஸ்திரேலியா சென்றபோது, பிரதமர் நரேந்திர மோடி, விளையாட்டுத் துறையில் பயிற்சி, அறிவியல், தொழில்நுட்பம், உபகரண**

**உற்பத்தி போன்ற தளங்களில் இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான ஒத்துழைப்புக்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. அதன் ஒரு பகுதியாக, ஆஸ்திரேலியாவின் பிக் பாஷ் லீக் கிரிக்கெட் போட்டியின் நடப்பு சீசனின் முதல் ஆட்டம் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ. சிதம்பரம் மைதானத்தில் வரும் டிசம்பர் 12-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதில் மெல்போர்ன் ரெனிகேட்ஸ்-பெர்த் ஸ்கார்சர்ஸ் அணிகள் மோதுகின்றன.**

5. **நாட்டின் ஒட்டு மொத்த மருத்துவக் கட்டமைப்பை எண்மமயமாக்கும் ஆயுஷ்மான் பாரத் எண்ம திட்டத்தின்கீழ் (ஏபிடிஎம்) இதுவரை 93.95 கோடிக்கும் மேற்பட்ட கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன. சுமார் 105 கோடி மருத்துவ ஆவணங்கள் எண்ம ரீதியில் இணைக்கப்பட்டுள்ளன என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.**

i. நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை எண்மமயமாக்குவதுடன், நோயாளிகள், மருத்துவர்கள், மருத்துவமனைகள், காப்பீட்டு நிறுவனங்களுக்கு இடையிலான இடைவெளியை பாதுகாப்பான எண்ம வழிமுறைகளின் மூலம் இணைக்கும் நோக்கில் மத்திய அரசால் கடந்த 2021-இல் ஆயுஷ்மான் பாரத் எண்ம திட்டம் தொடங்கப்பட்டது.

ii. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் 14 இலக்க தனித்துவ எண்ணின் மூலம் நோயாளிகள் தங்களின் மருத்துவ பரிசோதனை அறிக்கைகள், மருந்துச் சீட்டுகள், காப்பீட்டு விவரங்கள் உள்ளிட்ட தரவுகளை ஏபிடிஎம் தளத்தில் பாதுகாப்பாக சேமித்து வைக்க முடியும். நாடெங்கிலும் உள்ள அரசு, தனியார் மருத்துவமனைகள், மருந்தகங்கள், ஆய்வகங்கள் உள்ளிட்டவை இத்தளத்தில் இணைக்கப்பட்டு வருகின்றன. அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளுக்கு நோயாளிகள் செல்லும்போது, 14 இலக்க எண்ணைக் கொண்டு, அவர்களின் அனுமதியுடன் மருத்துவத் தரவுகளை மருத்துவர்கள் பார்த்து எளிதாக சிகிச்சை அளிக்க முடியும்.

iii. உலகஅளவில் மிகப்பெரிய எண்ம மருத்துவக் கட்டமைப்புகளில் ஒன்றாக உருவெடுத்துள்ள இத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து தில்லியில் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜெ.பி.நட்டா தலைமையில் நடைபெற்ற திட்ட வழிநடத்துதல் குழுக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இது தொடர்பாக அரசுத் தரப்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

- ஆயுஷ்மான் பாரத் எண்ம திட்டத்தில் இதுவரை 93.95 கோடிக்கும்

மேற்பட்ட கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன. 5.33 லட்சம் மருத்து வமனைகள்-மருந்தகங்கள்-ஆய்வகங்கள்-பிற மருத்துவ மையங்களும், 9.85 லட்சம் மருத்துவப்பணியாளர்களும் இணைந்துள்ளனர். 105 கோடி மருத்துவ ஆவணங்கள் எண்ம முறையில இணைக்கப்பட்டுள்ளன.

6. **சென்னை உள்பட இந்தியாவில் 14 நகரங்கள் கடும் வெப்பத்தால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக ஆக்ஸ் ஃபோர்டு பல்கலைக்கழகம் வெளியிட்ட ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.**

i. இந்த ஆய்வறிக்கையில் உலக அளவில் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 205 நகரங்களில் வெப்பத்தின் தாக்கம் ஆய்வு செய்யப்பட்டது.

ii. இதில் வயது மற்றும் நிதிநிலை, குளிர் சாதன உள்கட்டமைப்பு மற்றும் மரங்களின் எண்ணிக்கை, வெப்பம் தொடர்பான நோய்கள் மற்றும் உயிரிழப்புகளுக்கு ஆளாகும் வாய்ப்பை அதிகரிக்கும் மக்கள் தொகை மற்றும் சமூக- பொருளாதார நிலைகளும் காரணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டன.

iii. இதனடிப்படையில் கடும் வெப்ப பாதிப்புகளை எதிர்கொள்ள வாய்ப்புள்ளதாக கருதப்படும் முதல் 50 நகரங்களில் சென்னை மற்றும் மதுரை (தமிழ்நாடு), நாகபுரி மற்றும் புணே (மகாராஷ்டிரம்), பெங்களூரு (கர்நாடகம்), கான்பூர் மற்றும் லக்னௌ (உத்தர பிரதேசம்), ஜெய்பூர் (ராஜஸ்தான்) உள்ளிட்ட 14 நகரங்கள் இடம்பெற்றுள்ளன.

iv. இந்தப் பட்டியலில் இராக்கின் அல்- பஸ்ரா நகரம் முதலிடத்திலும், அகமதாபாத் (குஜராத்) இரண்டாமிடத்திலும் உள்ளன. ஒட்டுமொத்தமாக அதிக வெப்ப பாதிப்புகளுக்குள்ளாக வாய்ப்புள்ள 95 சதவீத நகரங்கள் தெற்கு, தெற்காசியா மற்றும் சஹாரா-ஆப்பிரிக்காவிலும் குறிப்பாக இந்தியா, பாகிஸ்தான், நைஜீரியா, கானா ஆகிய 4 நாடுகளிலும் உள்ளதாக அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. **இந்தியாவில் வீடுகளின் மேற்கூரை சூரியசக்தி மின் உற்பத்தித் திட்டத்தை ஊக்குவிக்கும் மத்திய அரசின் திட்டத்தை தீவிரப்படுத்தும் வகையில், ரூ.8,482 கோடி (890 மில்லியன் டாலர்) கடனுதவி வழங்க உலக வங்கி முன்வந்துள்ளது.**

i. இதனால், வீடுகளில் தூய்மை எரி சக்தி பயன்பாடு அதிகரிக்கும் என்பதோடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி, அதற்கான உபகரணங்கள் பொருத்துதல் மற்றும் சேவைகள் அடிப்படையில் 17 லட்சம் வேலை வாய்ப்புகளும் உருவாகும் என எதிர் பார்க்கப்படுகிறது.

ii. வீடுகளிலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில், இல்லந்தோறும் இலவச சூரியசக்தி மின் உற்பத்தித் திட்டத்தை மத்திய அரசு கடந்த 2024-ஆம் ஆண்டு அறிமுகம் செய்தது. இத்திட்டத்தின் கீழ் வீடுகளில் சூரியசக்தி மின் உற்பத்திக்கான தகடுகள் (பேனல்கள்) அமைக்க மத்திய அரசு மானியம் வழங்குகிறது. அதிகபட்சமாக ரூ.78,000 வரை மானியம் வழங்கப்படும். இந்த மானியம் போக, சூரியசக்தி தகடுகள் அமைப்பதற்கான மீதமுள்ள தொகைக்கு உலக வங்கி வழங்குகிறது.

iii. குறைந்த வட்டியில் (6.5%) வங்கிக் கடன் பெறுவதற்கும் மத்திய அரசு வழி செய்துள்ளது. இத்திட்டம் மூலம் நாடு முழுவதும் பல லட்சம் வீடுகளில் சூரியசக்தி மின் உற்பத்தித் திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

iv. வரும் 2035-ஆம் ஆண்டுக்குள், மின் உற்பத்தியில் புதைபடிம எரி பொருள் அல்லாத எரிசக்தி வளங்களின் பங்கை 60 சதவீதமாக உயர்த்தவும், 2070-ஆம் ஆண்டுக்குள் மின் உற்பத்தியில் புதைபடிம எரிபொருள் பயன்பாடே இல்லாத நிலையை எட்டவும் இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்தச் சூழலில், மத்திய அரசின் வீடுகளின் மேற்கூரை சூரியசக்தி மின் திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில், ரூ.8,482 கோடி கடனுதவி வழங்க உலக வங்கி முன் வந்துள்ளது. இதுகுறித்து உலக வங்கி வெள் ளிக்கிழமை வெளியிட்ட அறிவிப் பில்கூறியிருப்பதாவது:

- இந்தியாவில் வீடுகளின் மேற் கூரை சூரியசக்தி மின் உற்பத்தித் திட்டத்தை ஊக்குவிக்க, பன்முக நிதியுதவி அமைப்புகள் மூலம் ரூ.8,482 கோடி கடனுதவி வழங்க உலக வங்கியின் நிர்வாக இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான சர்வதேச வங்கி (ஐபிஆர்டி) சார்பில் ரூ.7,817 கோடியும் (820 மில் லியன் டாலர்), தூய்மை தொழில்நுட்ப நிதியிலிருந்து ரூ.572 கோடியும் (60 மில்லியன் டாலர்), ஐபிஆர்டி-யின் வாழத்தக்க பூகோள நிதியிலிருந்து ரூ.95 கோடியும் (10 மில்லியன் டாலர்) கடனுதவி வழங்கப்படும்.
- கூடுதலாக, வீடுகளில் மேற்கூரை சூரிய சக்தி தகடுகள் நிறுவுவதற்கு

உதவும் வகையில், வணிகக் கடன் வடிவில் ரூ.40,045 கோடி (4.2 பில்லியன் டாலர்) அளவில் தனியார் நிதியை உலக வங்கி திரட்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இதுகுறித்து உலக வங்கியின் இந்தியா பிரிவு பொறுப்பு இயக்குநர் பால் ப்ரோசீ கூறுகையில், 'இந்தியாவின் மேற்கூரை சூரிய சக்தி மின் உற்பத்தித் திட்டத்துக்கு கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக உலக வங்கி ஆதரவு அளித்து வருகிறது. தற்போது வழங்கப்படும் புதிய கடனுதவி, இத்திட்டத்தை மேலும் ஊக்குவிக்கும் என்பதோடு, இத்துறையில் புதிய வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும்' என்றார்.

### 8. சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு நாசாவை சேர்ந்த இந்திய வம்சாவளி விண்வெளி வீரர் அனில் மேனன் (49) ஜூலை 14-ஆம் தேதி பயணிக்கிறார்.

i. கஜகஸ்தானில் உள்ள பைகானூர் இருந்து ராஸ்கோஸ்மோஸ் விண்வெளி ஏவுதளத்தில் சோயூஸ் எம்எஸ்-29 என்ற விண்கலத்தில் புறப்படும் அவர் சர்வதேச விண்வெளி நிலையத்தில் 8 மாதம் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளவுள்ளார். அவருடன் பியோத்தர் டுப்ரோவ் மற்றும் அன்னாகிகினா ஆகிய விண்வெளி வீரர்களும் செல்கின்றனர்.

ii. அமெரிக்காவின் மினியா பொலிஸ் நகரில் பிறந்த அனில் மேனன் அவசரகால மருத்துவர் மற்றும் விண்வெளிப் படை கர்னல் ஆவார். அமெரிக்கவிமானப் படையில் பணியாற்றியபோது ஆப்கானிஸ்தானில் மேற்கொள்ளப்பட்ட ‘ஆபரேஷன் எண்டியூரிங் ஃப்ரீடம் மற்றும் எவரெஸ்ட் சிகரத்தில் மலையேற்ற வீரர்களின் உடல்நலப் பராமரிப்பு ஆகிய பணிகளிலும் ஈடுபட்டார்.

iii. 2014-இல் விமான மருத்துவராக நாசாவில் பணியைத் தொடங்கிய அனில் மேனன் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்று வந்த விண்வெளி வீரர்களுடன் பணியாற்றியுள்ளார். 2018-இல் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தில் சேர்ந்த அவர் அந்நிறுவனத்தின் மருத்துவத் திட்டத்தை தொடங்கினார். ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் முதல் மனித விண்வெளிப் பயணத் திட்ட தயாரிப்புப் பணியிலும் அவர் ஈடுபடடார்.

iv. 2021, டிசம்பரில் நாசா வின்வெளி வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், இரண்டு ஆண்டுகள் அங்கு பயிற்சி வீரராகத் தொடர்ந்தார்.

v. அனில் மேனனின் மனைவியும் விண்வெளி வீராங்கனையுமான அன்னா வில்ஹெம், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் போலரிஸ்டான் என்ற தனியார் குழுவுடன் கடந்த 2024-இல் 5 நாள் பயணமாக விண்வெளிக்குச் சென்று வந்தார்.

vi. இந்நிலையில், ஜூலை 14-ஆம் தேதி சர்வதேச விண்வெளி நிலையம் செல்லும் அனில் மேனன், நீண்டகால விண்வெளிப் பயணத்தால் ஏற்படும் உடலியல் பாதிப்புகள் மற்றும் மிகக் குறைந்த ஈர்ப்பு விசை விண்வெளி வீரர்களின் ரத்த ஓட்டத்தை எவ்வாறு பாதிக்கிறது என ஆய்வு மேற்கொள்ளவுள்ளார். மேலும், உயர்திறன் செயல்பாடு கொண்ட கணினிகள், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் மற்றும் மேம்படுத்தப்பட்ட மருத்துவ சாதனங்களுக்குத் தேவையான பாகங்களை தயாரிக்கத் தேவைப்படும் செமிகண்டக்டர்களை விண்வெளியிலேயே தயாரிப்பது குறித்தும் அவர் ஆய்வு நடத்துகிறார்.

## 9. செயற்கை கருத்தரிப்பு (ஐவிஎஃப்) மையங்களை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை மறுஆய்வு செய்ய உயர் நிலைக் குழுவை தேசிய மகளிர் ஆணையம் அமைத்தது.

i. இதன் தலைவராக தில்லி உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ஆஷா மேனன் நியமிக்கப்பட்டார். நீதித் துறை, மருத்துவம், தடயவியல், அறிவியல், சட்டம், பொதுக் கொள்கை உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

ii. இதுகுறித்து தேசிய மகளிர் ஆணையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், ‘செயற்கை கருத்தரிப்பு தொழில்நுட்ப (ஏஆர்டி) துறை விரிவடைந்துவரும் சூழலில் அதற்கான சட்டங்களில் திருத்தம் மேற்கொண்டு ஒழுங்குபடுத்தவும், பெண்களின் இனப்பெருக்க உரிமைகள், பெண்களின் கண்ணியம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கிலும் பரிந்துரைகள் வழங்க உயர்நிலைக் குழு அமைக்கப்படுகிறது. இக்குழு ஏஆர்டி சட்டம், 2021 மற்றும் வாடகைத் தாய்மை சட்டம், 2021 மற்றும் 2026-இல் இது தொடர்பாக வெளியிடப்பட்ட திருத்தங்கள் குறித்தும் மறுஆய்வு செய்யவுள்ளது. ஏஆர்டி மையங்கள் மற்றும் ஐவிஎஃப் மையங்களில் ஒரே மாதிரியான சிகிச்சை வழங்கப்படுவதற்கான நிலையான வழிகாட்டுதல்களையும் இக்குழு முன்மொழியவுள்ளது.

iii. ஏஆர்டி துறையின் எதிர்கால செயல்பாடுகளை வலுப்படுத்த சட்ட, கொள்கை மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களை இக்குழு வலியுறுத்தும்.

iv. தேசிய ஏஆர்டி மற்றும் வாடகைத் தாய் முறை பதிவேட்டில் ஏஆர்டி மையங்கள் பதிவு செய்வது கட்டாயம். இத்துறையில் மருத்துவச் சுற்றுலா வளர்ந்துவரும் நிலையில், பாலினத் தேர்வு உள்பட இந்தியாவின் சட்ட ரீதியான பாதுகாப்பு அம்சங்கள் மீறப்படுமோ என்ற கவலையும் எழுந்துள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.

**10. பெட்ரோலில் 20 சதவீத எத்தனால் கலப்பால், வாகனங்களின் எரிபொருள் சிக்கனம் (மைலேஜ்) 3 சதவீதம் முதல் 5 சதவீதம் வரை குறைய வாய்ப்புள்ளது. ஆனால், தூய்மையான, இலகுவான என்ஜின் செயல்பாடு, சீரான வேக அதிகரிப்பு, சிறந்த பிக்அப், குறைவான கார்பன் உமிழ்வு உள்ளிட்ட பலன்கள் கிடைக்கும்' என்று மத்திய பெட்ரோலிய அமைச்சகம் விளக்கமளித்துள்ளது.**

i. எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்ய இறக்குமதியைச் சார்ந்திருக்கும் நிலையைக் குறைக்கவும், வாகனங்களின் கார்பன் உமிழ்வைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் பெட்ரோலில் எத்தனால் கலப்பை மத்திய அரசு ஊக்குவித்து வருகிறது. பெட்ரோலில் எத்தனால் கலப்பை படிப்படியாக அதிகரித்து, தற்போது 20 சதவீத எத்தனால் கலக்கப்பட்ட பெட்ரோல் (இ20 பெட்ரோல்) பரவலாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

ii. தில்லி போன்ற காற்று மாசு அதிகம் உள்ள பகுதிகளில் இந்த விகிதம் மேலும் அதிகரிக்கப்பட்டு வருகிறது. இந்தச் சூழலில், எத்தனால் கலந்த பெட்ரோல் பயன்பாட்டால், வாகனத்தின் மைலேஜ் குறைவதோடு, என்ஜின் பாதிக்கப்பட்டு முழுமையாகச் செயலிழக்கும் அபாயம் உள்ளதாக அச்சம் தெரிவிக்கப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் வகையில் மத்திய பெட்ரோலிய அமைச்சகம் வெளியிட்ட விளக்கத்தில் கூறியிருப்பதாவது:

- தூய பெட்ரோல் அல்லது 10 சதவீத எத்தனால் கலந்த 'இ10' பெட்ரோலை விட 20 சதவீத எத்தனால் கலந்த 'இ20' பெட்ரோல் தூய்மையான, உயர்தரமான மற்றும் அதிக செயல்திறன் கொண்ட எரிபொருளாகும்.
- பல ஆண்டுகால அறிவியல் ஆய்வுகள், வாகன உற்பத்தியாளர்களுடனான ஆலோசனைகள் மற்றும் உள்நாட்டு எத்தனால் உற்பத்தி விரிவாக்கத்துக்குப்பிறகே, எத்தனால் கலந்த

பெட்ரோல் விநியோகம் அறிமுகப்படுத்தப்பட்டது.

iii. இந்த எத்தனால் கலப்பு திட்டத்தின் மூலம், 2014-15-ஆம் ஆண்டு முதல் ரூ.1.97 லட்சம் கோடி அந்நியச் செலாவணி சேமிக்கப்பட்டுள்ளது. சுமார் 316 லட்சம் டன் கச்சா எண்ணெய் இறக்குமதி குறைக்கப்பட்டுள்ளது.

iv. ஏறக்குறைய 952 லட்சம் டன் கரியமில வாயு வெளியேற்றம் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகளுக்கு ரூ.1.66 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகை வழங்கப்பட்டுள்ளது. என்றும் மத்திய அமைச்சகம் தெரிவித்தது.

**11. அரசு நிகழ்ச்சிகளில் முதலில் மாநில பாடலும், பின்னர் தேசிய பாடலும், அதன் பின்னர் தேசிய கீதமும் பாடப்பட வேண்டும் அல்லது இசைக்கப்பட வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெளிவுபடுத்தியுள்ளது. இதுதொடர்பாக அனைத்து மாநில, யூனியன் பிரதேச அரசுகளுக்கு மத்திய உள் துறை அமைச்சகம் வெளியிட்ட புதிய உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:**

i. சில மாநிலங்களில் அரசு நிகழ்ச்சிகளின்போது தேசிய கீதம் (ஜன கண மன), தேசிய பாடல் (வந்தே மாதரம்) ஆகியவற்றுடன் மாநில பாடலும் பாடப்பட்டு இசைக்கப்படுகிறது.

ii. அவ்வாறு மாநில பாடல் பாடப்படும் நிகழ்ச்சிகளில், முதலில் மாநில பாடலும், அதைத்தொடர்ந்து தேசிய பாடலும், அதன் பின்னர் தேசிய கீதமும் பாடப்பட வேண்டும் அல்லது இசைக்கப்பட வேண்டும். இந்த வரிசை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும்.

iii. தேசிய பாடலும், தேசிய கீதமும் பாடப்படும்போது அவற்றின் வார்த்தைகளும் வரிகளும் சரியாக உச்சரிக்கப்பட வேண்டும்.

iv. தேசிய பாடல், தேசிய கீதம் ஆகியவற்றின் சரியான பாடல் வரிகளும், அவற்றை எப்படி சரியாக உச்சரிக்க வேண்டும் என்ற விவரமும் மத்திய உள்துறை அமைச்சக வலைத்தளத்தில் உள்ளது.

v. எந்தெந்த நிகழ்ச்சிகளில் தேசிய கீதம், தேசிய பாடலை கட்டாயம் பாட வேண்டும் அல்லது இசைக்க வேண்டும், எந்த நிகழ்ச்சிகளில் அவற்றை வேண்டுமானால் பாடலாம் அல்லது இசைக்கலாம் என்ற முழுமையான பட்டியலும் தனது உத்தரவுகளில் உள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சக உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**12. தனியார் பள்ளிகள் அரசு நிர்ணயித்த கட்டண விவரங்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த சமீபத்திய உத்தரவு மற்றும் இந்தியக் கல்வி முறையில் உள்ள பரந்த அமைப்புசார் சிக்கல்கள் குறித்த பகுப்பாய்வு.**

i. வரலாற்று மற்றும் சட்டரீதியான காலவரிசை

- கோயம்புத்தூரைச் சேர்ந்த எம். ரியா கத் அலி, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (RTI) கீழ் தனியார் பள்ளிகளுக்கான அரசு நிர்ணயித்த கட்டண விவரங்களைக் கோரி விண்ணப்பித்தபோது இச்சட்டப் போராட்டம் 2022-இல் தொடங்கியது.
- மூன்று ஆண்டுகள் தொடர்ந்து முயற்சித்த போதிலும், கோரப்பட்ட தகவல்கள் முழுமையாக வழங்கப்படவில்லை.
- சமீபத்தில், மாநிலத் தகவல் ஆணையர் வி.பி.ஆர். இளம்பரிதி இதில் தலையிட்டு, தாமதத்திற்கான விளக்கத்தை கல்வித்துறை அதிகாரிகளிடம் கோரியதுடன், ஜூன் 5-ஆம் தேதிக்குள் கட்டண விவரங்களை பொதுவெளியில் வெளியிடவும் உத்தரவிட்டார்.
- அகில இந்திய தனியார் கல்வி நிறுவனங்கள் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் கே. பழனியப்பன், இந்த உத்தரவு தனியார் நிறுவனங்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகக் கூறி சென்னை உயர் நீதிமன்றத்தில் அதை எதிர்த்து வழக்கு தொடர்ந்தார்.
- உயர் நீதிமன்றத் தீர்ப்பு (ஜூலை 8, 2026): நீதிபதி எம். தண்டபாணி வெளிப்படைத்தன்மைக்கான அவசியத்தை உறுதிப்படுத்தினார். அரசியலமைப்பின் 226-வது பிரிவின் கீழ், பள்ளிகளின் அறிவிப்புப் பலகைகள் மற்றும் இணையதளங்களில் கட்டண விவரங்களை பொதுவெளியில் வெளியிட உத்தரவிடும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு என்று அவர் தீர்ப்பளித்தார்.

ii. மக்கள் தொகை மற்றும் மாணவர் சேர்க்கை புள்ளிவிவரங்கள் (2022–2026)

பள்ளி மாணவர் சேர்க்கை முறைகளில் குறிப்பிடத்தக்க தேசிய அளவிலான மாற்றம்:

- தேசிய அளவில், அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை 2022–23-இல் 39.1%-லிருந்து 2025–26-இல் 34.7%-ஆகக் குறைந்தது.
- அதே காலகட்டத்தில், தனியார் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை 44%-லிருந்து 50%-ஆக அதிகரித்தது.

- 2025–26 கல்வியாண்டில், அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை 43.03 லட்சமாகவும் (முந்தைய ஆண்டை விட 2.07 லட்சம் குறைவு), தனியார் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை 62.03 லட்சமாகவும் (1.77 லட்சம் அதிகரிப்பு) இருந்தது.
- தமிழ்நாட்டில், 2023–24 கல்வியாண்டை ஒப்பிடுகையில் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை 5.9 லட்சம் மாணவர்கள் குறைந்துள்ளது.

iii. அமைப்புசார் சிக்கல்கள் மற்றும் வெளிப்படைத்தன்மை இன்மை

- கல்வி என்பது முன்பு நல்லெண்ணம் கொண்டவர்களால் வழங்கப்பட்ட ஒரு தன்னலமற்ற சேவையாக இருந்தது; ஆனால், தற்போது அது பணம் செலுத்தக்கூடியவர்களுக்கு மட்டுமே கிடைக்கக்கூடிய ஒரு வணிகப் பொருளாக மாறியுள்ளது.
- கல்விக் கட்டணம் தவிர, சீருடைகள், காலணிகள், நோட்டுப் புத்தகங்கள், விளையாட்டுப் பயிற்சி, NEET/JEE பயிற்சி, கலை நிகழ்ச்சிகள், கல்விச் சுற்றுலாக்கள், கராத்தே மற்றும் இசைப் பயிற்சி ஆகியவற்றிற்காகத் தனியார் பள்ளிகள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை வசூலிப்பதாக விமர்சிக்கப்படுகின்றன.
- பள்ளி நிர்வாகம் குறிப்பிடும் குறிப்பிட்ட கடைகளிலிருந்து மட்டுமே சீருடைகள் மற்றும் காலணிகளை வாங்க வேண்டிய கட்டாயம் பெரும்பாலும் பெற்றோர்களுக்கு ஏற்படுகிறது.
- 'கல்வி உரிமைச் சட்டத்தின்' (RTE) கீழ், குறைந்த வருமானம் கொண்ட பிரிவினருக்கு 25% இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன; இருப்பினும், அதிக வருமானம் ஈட்டுபவர்கள் போலியான வருமானச் சான்றிதழ்களைப் பயன்படுத்தி இந்த இடங்களைப் பெறுகின்றனர்; சில சமயங்களில் பள்ளிகளும் இதனைப் புறக்கணித்துவிடுகின்றன.

iv. முடிவுரை மற்றும் நடவடிக்கைக்கான அழைப்பு

அரசுப் பள்ளிகளின் தரத்தை மேம்படுத்த அரசு செயல்பட வேண்டிய அதே வேளையில், தனியார் பள்ளிகள் வெளிப்படையான கட்டண விதிமுறைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்வது பள்ளி கல்வித் துறை மற்றும் நீதித்துறையின் கட்டாயப் பொறுப்பாகும். வெறும் 'வசதிகளை' வழங்குவதோ அல்லது தற்காலிகத் தீர்வுகளை அளிப்பதோ இதற்குப் போதுமானதல்ல; பெற்றோர்களையும் மாணவர்களையும் பாதுகாக்கச் சட்டத்தை மிகக் கடுமையாக அமல்படுத்த வேண்டியது அவசியமாகும்.

**13. விவசாயத் துறையில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் கடன் தள்ளுபடிகள் ஆகியவை உணவுப் பாதுகாப்பிற்கான அவசியமான சமூக முதலீடுகளாகும்.**

i. இந்திய விவசாயத்தின் வரலாற்றுப் பரிணாமம்

- வரலாற்று ரீதியாக, பிரிட்டிஷ் நிர்வாகம் இந்திய விவசாயிகளை ஏற்றுமதிக்கான பயிர்களைப் பயிரிட கட்டாயப்படுத்தியதுடன், முறையான ஒழுங்குமுறை இன்றி அதிக வரிகளையும் விதித்தது; இது பாரம்பரிய விவசாயக் கட்டமைப்பைச் சிதைத்தது.
- சுதந்திரத்திற்குப் பிறகு, உணவு உற்பத்தி குறைவாக இருந்ததால், இந்தியா இறக்குமதி செய்யப்பட்ட அமெரிக்கக் கோதுமையைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.
- 1965-ல் அறிமுகப்படுத்தப்பட்ட பசுமைப் புரட்சி, விவசாயிகளைத் தற்சார்பு முறைகளிலிருந்து வெளி இடுபொருட்களைச் (விதைகள், உரங்கள்) சார்ந்திருக்கும் முறைக்கு மாறக் கட்டாயப்படுத்தியது; இது விவசாயிகளை நிரந்தரக் கடனாளிகளாக மாற்றியது.

ii. தற்போதைய கடன் புள்ளிவிவரங்கள் (தமிழ்நாடு மற்றும் இந்தியா)

- தமிழ்நாட்டில் சுமார் 80 லட்சம் விவசாயக் குடும்பங்கள் உள்ளன. இவர்களில் 75–80% பேர் சுமார் 2 ஏக்கர் நிலம் கொண்ட சிறு விவசாயிகளாகவும், 18–20% பேர் 5 ஏக்கர் நிலம் கொண்ட குறு விவசாயிகளாகவும் உள்ளனர்.
- இக்குடும்பங்களில் ஏறக்குறைய 80% குடும்பங்கள் கடனில் உள்ளன. சிறு விவசாயிகளில் 77.4% பேரும், பெரிய விவசாயிகளில் 90%-க்கும் அதிகமானோரும் கடன் சுமையால் சிரமப்படுகின்றனர் என்று புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.
- விவசாயக் கடன் சுமையில் தமிழ்நாடு இந்தியாவில் இரண்டாவது இடத்தில் உள்ளது; இங்கு 74.5% விவசாயக் குடும்பங்கள் கடனில் உள்ளன. ஆந்திரப் பிரதேசம் 93.2% என்ற விகிதத்துடன் முதலிடத்தில் உள்ளது.
- ஒரு விவசாயக் குடும்பத்தின் சராசரி கடன் ₹1,06,546 ஆக உள்ளது, அதே சமயம் அவர்களின் சராசரி ஆண்டு வருமானம் ₹1.25 லட்சம் மட்டுமே; அதாவது, அவர்களின் வருமானத்தில் பெரும்பகுதி கடனை அடைப்பதிலேயே செலவாகிறது.

iii. முக்கிய கடன் தள்ளுபடித் திட்டங்களின் காலவரிசை (1990–2026)

தற்காலிக நிவாரணமாகக் கடன் தள்ளுபடி மூலம் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் வரலாறு:

- 1990: மத்திய அரசு விவசாயி ஒருவருக்கு ₹10,000 வீதம் கடன் தள்ளுபடி செய்தது; இதற்காக அரசுக்கு ₹10,000 கோடி செலவானது.
- 2006: மு. கருணாநிதி தலைமையிலான தமிழ்நாடு அரசு, கூட்டுறவு விவசாயக் கடன்களில் ₹7,000 கோடியைத் தள்ளுபடி செய்தது.
- 2008: பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான அரசு ₹71,000 கோடி மதிப்பிலான மிகப்பெரிய கடன் தள்ளுபடித் திட்டத்தைச் செயல்படுத்தியது; இதன் மூலம் 3.73 கோடி விவசாயிகள் பயனடைந்தனர்.
- 2016: ஜெ. ஜெயலலிதா தலைமையிலான அரசு, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான ₹5,320 கோடி கடனைத் தள்ளுபடி செய்தது.
- 2021: மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு ₹12,110 கோடி மதிப்பிலான குறுகிய காலப் பயிர்க் கடன்களைத் தள்ளுபடி செய்தது.
- 2026 (தற்போதைய நிலை): தற்போதைய அரசு இரண்டு கடன் வகைகளின் கீழ் ₹5,932 கோடி கடனைத் தள்ளுபடி செய்துள்ளது; இருப்பினும், விவசாயிகள் முழுமையான கடன் தள்ளுபடியைத் தொடர்ந்து கோரி வருகின்றனர்.

iv. பொருளாதாரச் சவால்கள் மற்றும் உற்பத்திச் செலவுகள்

- அரசு மற்றும் சந்தையால் நிர்ணயிக்கப்படும் கொள்முதல் விலைகள் பெரும்பாலும் உண்மையான உற்பத்திச் செலவை ஈடுகட்டுவதில்லை. உதாரணமாக, ஒரு லிட்டர் பசுவின் பாலை உற்பத்தி செய்ய ₹63.25 செலவாகும் நிலையில், விவசாயிகளுக்கு அதற்குக் குறைவான தொகையே கிடைக்கிறது; இதனால் அவர்கள் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ரூபாயை இழக்கின்றனர்.
- 2007 முதல் 2026 வரையிலான காலகட்டத்தில், கால்நடைத் தீவனத்தின் விலை 220–230% அதிகரித்துள்ளது; ஆனால், பாலுக்கான கொள்முதல் விலை 135–150% மட்டுமே உயர்ந்துள்ளது.
- போதிய சந்தை விலை கிடைக்காததால், இந்திய விவசாயிகள் ஆண்டுதோறும் ஒட்டுமொத்தமாக ₹2.7 லட்சம் கோடி இழப்பைச் சந்திக்கின்றனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

v. சர்வதேச ஒப்பீடுகள் மற்றும் ஆதரவு அமைப்புகள்

- அமெரிக்கா: "பண்ணை மசோதா" (Farm Bill) மூலம், விவசாயிகளின்

வருமான நிலைத்தன்மையை உறுதிப்படுத்த அமெரிக்க அரசு பில்லியன் கணக்கான டாலர்களை நேரடி உதவி, பயிர் காப்பீடு மற்றும் பேரிடர் நிவாரணம் ஆகியவற்றிற்காக வழங்குகிறது.

- ஐரோப்பிய ஒன்றியம்: ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவான விவசாயக் கொள்கையானது, விவசாயிகளின் நிலத்தின் அளவின் அடிப்படையில் நேரடி வருமான ஆதரவை வழங்கத் தனது பட்ஜெட்டில் 60%-க்கும் அதிகமான தொகையை ஒதுக்குகிறது.
- உலகளாவிய நடைமுறை: வளர்ந்த நாடுகள் விவசாயிகளை வெறும் "கடனைத் திருப்பிச் செலுத்துமாறு" மட்டும் கேட்பதில்லை; மாறாக, விலை வீழ்ச்சி மற்றும் இயற்கை பேரிடர்களுக்கு எதிராக அவர்களுக்கு விரிவான பாதுகாப்பை வழங்குகின்றன.

vi. காரணங்கள் மற்றும் நீண்டகாலப் பரிந்துரைகள்

- பெருநிறுவனங்களுக்கான மானியங்களுடன் ஒப்பிடுகையில், தமிழக விவசாயிகளின் கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்வது (இதற்கான மதிப்பீடு ₹80,000 முதல் ₹1,00,000 கோடி வரை) ஒரு சிறிய செலவுதான்; மேலும், இது நாட்டின் உணவுப் பாதுகாப்பிற்கு அவசியமானதாகும்.
- விவசாயிகளின் கடனைத் தள்ளுபடி செய்வதன் மூலம் பணம் மீண்டும் கிராமப்புற மக்களின் கைகளுக்குச் செல்கிறது; இது கிராமப் பொருளாதாரங்கள், சிறு வணிகங்கள் மற்றும் சேவைத் துறையை ஊக்குவிக்கிறது.
- கடன் சுழற்சியைத் தவிர்க்க பின்வருவன பரிந்துரைக்கப்படுகின்றன:

1. விவசாயிகளுக்கான வருமான உத்தரவாதத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.
2. கொள்முதல் விலையானது உற்பத்திச் செலவு மற்றும் வாழ்வாதாரச் செலவு ஆகியவற்றை ஈடுகட்டுவதை உறுதி செய்தல்.
3. அனைத்து வகையான இயற்கை பேரிடர்கள் மற்றும் விலை வீழ்ச்சிகளுக்கு எதிராக விரிவான பயிர் காப்பீட்டை வழங்குதல்.
4. வட்டி இல்லாக் கடன்களை வழங்குதல் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் மதிப்பு கூட்டப்பட்ட விவசாயப் பொருட்களை ஊக்குவித்தல்.